**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No. 58/2013**

Deposition of witness for : PW5

Name : சித்தேஸ்வரன்

Father's / Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 10th day of December 2024.

10-12-2024

**A1 to A4, A6, A7, A10 and A12, A13 present. A14 produced. A5, A11 charges abated. A8 and A9 Petition filed and allowed.**

**முதல் விசாரணை:-**

நான் அண்ணா சாலை, இரண்டாவது கிராஸ், சின்னதிருப்பதில் சம்பவத்தின்போது குடியிருந்து வந்தேன். தற்போது பாரதி நகர், முதல் தெரு, சின்னதிருப்பதியில் குடியிருந்து வருகிறேன். நான் தென்றல் காபி பார் வைத்து தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன செந்தில் வேலை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் A1, A2, A3, A6 ஆகியோர்களை

தெரியும். அவர்களுடன் எனக்கு வழக்கு உள்ளது. மற்றவர்களை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்திற்கு போலிசார் அழைத்ததின்போரில் சென்றிருந்தபோது கையெழுத்து போடச்சொன்னார்கள். கையெழுத்து போட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன செந்தில்வேல் என் உடன் இருப்பவர் என்றும், கடந்த 22.01.2011ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் எனது தம்பி யுவராஜ் மற்றும் ஜெகதீசன் ஆகியோருடன் சென்று கரிகாலனிடம் பேசி வரலாம் என்று சென்றோம் என்றும், அங்கு பாலகிருஷ்ணன் வீட்டிலிருந்த கரிகாலனிடம் எதுக்கு எங்களை பற்றி செந்தில்வேலிடம் பேசினீர்கள் என்று கேட்டபோது கரிகாலன் அவருடன் இருந்த சிக்கந்தர், கரிகாலன் தம்பி பிரதாப், பாலகிருஷ்ணன், எலும்பன் கார்த்தி, முரளி, கேரளா மணி, பல்சர்சந்துரு, தீலிப், விஜி (எ) விஜயகுமார், கோபிநாத், ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் நீங்களா, நாங்களா என்று பார்த்து கொள்ளலாம் என்றும், உன்னையும், செந்தில்வேலையும் போடாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், பிறகு அங்கிருந்து நாங்கள் வந்துவிட்டோம் என்றும், 22.01.2011ம் தேதி இரவு 9.30 மணியளவில் செந்தில்வேலை அவர்கள் கொலை செய்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன் என்றும்,

அது சம்மந்தமாக போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்கள்.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.